


தமிழ்நாடு சட்டமன்ற பேரவை

(பதினாறாவது பேரவை)

பேரவைத்தலைவர் அவர்கள் தலைமை

எண் 7, முதல் II, வரையிலான

வினா விடைகள்

சட்டப்பேரவைச் செயலகம்

சென்னை-600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு
(2008–2009)

(பதின்மூன்றாவது பேரவை)

ஏழாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : 12.11.2008)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு
(2008–2009)

(பதின்மூன்றாவது பேரவை)

ஏழாவது அறிக்கை


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

		பக்கம்
1. 2008–2009 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு	..	iii
2. முகவுரை	..	v
3. அறிக்கை	..	vii

இணைப்பு–1

1. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் பதிலின் மீதான குழுவின் கருத்துரை	..	1–2
2. கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் பதிலின் மீதான குழுவின் கருத்துரை	..	3–4
3. கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறையின் பதிலின் மீதான குழுவின் கருத்துரை	..	5

இணைப்பு–2

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்	..	6


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008–2009 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு

(2008 ஆம் ஆண்டு மே திங்கள் 15 ஆம் நாள் நியமனம் செய்யப்பட்டது)

தலைவர்

திரு. எஸ்.கே. வேதரத்தினம்

உறுப்பினர்கள்

திரு. இரா. இராம்பிரபு

திரு. பெ. கண்ணன்

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்

திரு. ம. அ. கலீலுர் ரஹ்மான்

திரு. எஸ். எஸ். குருசாமி

திரு. சை. சையது கௌஸ் பாஷா

திருமதி. எஸ். தேன்மொழி

திரு. இ. மகேந்திரன்

திரு. பெ.சு. விஜயகுமார்

திரு. ஞா. ஜாண் ஜோசப்

செயலகம்

திரு. மா. செல்வராஜ்	:	செயலாளர்
திருமதி இரா. அமிர்தவல்லி	:	துணைச் செயலாளர்
திரு. சு. சந்திரன்	:	சார்புச் செயலாளர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

முகவுரை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு, சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் 32–வது ஆண்டறிக்கை (2005–2006), தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் 30–வது, 31–வது மற்றும் 32–வது ஆண்டறிக்கைகள், (2004–2005, 2005–2006 மற்றும் 2006–2007), அரசு ரப்பர் கழகத்தின் 23–வது ஆண்டறிக்கை (2006–2007), கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் 2004–2005 மற்றும் 2005–2006–ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள், தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் 42–வது ஆண்டறிக்கை (2006–2007) கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 33–வது ஆண்டறிக்கை (2005–2006) ஆகியவை காலதாமதமாக பேரவைக்கு அளிக்கப்பட்டமைக் குறித்து சம்பந்தப்பட்டத் துறைகளின் அரசு செயலாளர்கள் 24.07.2008 அன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு காலதாமதத்திற்கான விளக்கத்தினை அளித்தனர். அரசு செயலாளர்கள் அளித்த விளக்கத்தின் மீதான **7–வது அறிக்கையை (2008–2009)** குழுவின் தலைவராகிய நான், குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

2. சுற்றுச்சூழல் மற்றும் வனம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர், கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம் ஆகிய துறைகளின் அரசு செயலாளர்கள் அளித்த விளக்கத்தின் மீதான வரைவு அறிக்கையை குழு 18.8.2008, 19.8.2008, 20.8.2008 ஆகிய தேதிகளில் கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மேற்கொண்ட ஆய்வுப் பயணத்தின் போது ஆய்வு செய்தது. 20.8.2008 அன்று அறிக்கைக்கு குழுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டது.

3. குழுவின் பணிகளுக்கு உதவிய சட்டமன்றப் பேரவைச் செயலாளருக்கு குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சென்னை–600 009,
20.8.2008,
ஆவணி–4,
திருவள்ளுவராண்டு–2039.

எஸ்.கே. வேதரத்தினம்,
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு (2008–2009) 24.07.2008 அன்று நடைபெற்றக் குழுக் கூட்டத்தில், சுற்றுச் சூழல் மற்றும் வனம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர், கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளம் ஆகிய துறைகளின் கீழ் இயங்கும் கழகங்களின் ஆண்டறிக்கை/ தணிக்கைக் கணக்குகளின் மீதான அறிக்கைகள் கால தாமதமாகப் பேரவைக்கு அளிக்கப்பட்டமைக்கான அத்துறை செயலாளர்களின் விளக்கத்தின் மீதான **2008–2009–ஆம் ஆண்டிற்கான குழுவின் ஏழாவது அறிக்கை.**

சென்னை–600 009,
20.8.2008,
ஆவணி–4,
திருவள்ளுவராண்டு–2039.

எஸ்.கே. வேதரத்தினம்,
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – 1

சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் பதிலின் மீதான குழுவின் கருத்துரை

கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்	2004–2005	31.03.2006	30.08.2006	4 மாதங்கள் 29 நாட்கள்
	2005–2006	31.03.2007	28.03.2008	11 மாதங்கள் 27 நாட்கள்
	2006–2007	31.03.2008	05.05.2008	1 மாதம் 4 நாட்கள்
தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம்	2005–2006	31.03.2007	08.04.2008	1 வருடம் 7 நாட்கள்
அரசு ரப்பர் கழகம்	2006–2007	31.03.2008	05.05.2008	1 மாதம் 4 நாட்கள்

துறையின் பதில் (6)	குழுவின் கருத்துரை (7)
சுற்றுசூழல் மற்றும் வனத் துறை, அரசு முதன்மைச் செயலாளர் ஐந்து நிகழ்வுகளைப் பற்றி நான் இப்போது விளக்கம் அளிக்க விழைகிறேன். அதாவது, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் உரிய காலத்திற்குள், தலைமைச் செயலகத்திற்கு தங்களது அறிக்கையை அனுப்பி வைக்கிறார்கள். ஆனால், காலதாமதம் தலைமைச் செயலகத்தில் தான் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தை பொறுத்தவரையில் 2004–2005–ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 22.2.2006 அன்று	இனிவருங்காலங்களில் பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் அனைத்தையும் குறிப்பிட்ட காலத்திற்குள் தாமதமில்லாமல் உரிய படிவத்தில், காலதாமதம் ஏற்படின் அமைச்சரின் ஒப்புதல் பெற்று அனுப்பி வைக்க வேண்டும் என குழு வலியுறுத்தியதோடு தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் 2004–2005, 2005–2006, 2006–2007–ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகள் மற்றும் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் 2005–2006 ஆம் ஆண்டிற்கான

(6)–ன் தொடர்ச்சி

பெறப்பட்டிருக்கிறது.அதைபோல, 2005–2006–ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 24.12.2006–ல் பெறப்பட்டிருக்கிறது.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்த கழகங்களிடமிருந்து உரிய காலத்தில் அறிக்கைகள் தலைமைச் செயலகத்தில் பெறப்பட்டுள்ளன. தலைமைச் செயலகத்தில் வனத் துறைக்கு அந்த அறிக்கைகள் வந்த பின்பு, விற்பனையில் ஏற்பட்டுள்ள மந்தம் போன்ற சில ஐயப்பாடுகள் எழுப்பப்பட்டுள்ளன. அந்தக் கேள்விகளுக்கு அந்தக் கழகம் திரும்பவும் பதில் தந்துள்ளார்கள். பதில் வந்த பின்பு, மீண்டும் ஒப்புதலுக்கு அதை அனுப்பி ஒப்புதல் பெற்றிருக்கிறார்கள், இதுபோன்ற காரணங்களால் தான் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. எனினும், இதுபோன்ற காலதாமதம் இனிவரும் காலங்களில் ஏற்படாமல் பார்த்துக்கொள்கிறோம் என்கிற உறுதியை குழுவிற்கு அளிக்கிறேன்.

ஒவ்வொரு கழகத்திலும், நிறுவனத்திலும் அந்தத் துறை சம்பந்தப்பட்ட அரசுச் செயலாளர்கள், இயக்குநரவையிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். எனவே, இது போன்ற ஐயப்பாடுகளை, கேள்விகளை, அந்தக் கழகங்களின் இயக்குநர்கள் கூட்டத்திலே எழுப்பி விடையை பெற்றிருந்தால் காலதாமதம் ஏற்பட்டிருக்கிற வாய்ப்பிருக்காது. இந்த நிகழ்வுகளில் தலைமைச் செயலகத்தில் அறிக்கைகள் பெறப்பட்ட பின்பு, ஐயப்பாடுகள் எழுப்பப்பட்டு, மீண்டும் பதில் பெறப்பட்டிருப்பதால் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என குழுவின் முன் தனது விளக்கத்தை அளித்தார்.

(7)–ன் தொடர்ச்சி

அறிக்கை மற்றும் அரசு ரப்பர் கழகம் 2006–2007 ஆம் ஆண்டிற்கான அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டதற்கான காலதாமதத்திற்கு துறையளித்த விளக்கம் ஏற்றுக்கொள்ளப்படலாம் என குழு முடிவு செய்தது.

கைத்தறி, தைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த்துறை

வாரியம் / கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்	2004–2005	31.03.2006	30.08.2006	1 வருடம் 6 மாதங்கள் 18 நாட்கள்
	2005–2006	31.03.2007	01.02.2008	10 மாதங்கள்
தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்	2006–2007	31.03.2008	24.04.2008	23 நாட்கள்

துறையின் பதில்
(6)

அரசுச் செயலாளர் காலதாமதத்திற்கான காரணங்களை ஆராய்ந்து அவற்றை களைய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அதுமட்டுமல்லாமல், 2007–2008–ஆம் ஆண்டுக்கான அறிக்கைகளை டிசம்பர் 2008–க்குள் முடித்து விடுவோம் என குழுவின் முன் தெரிவித்தார். மேலும், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத்தொழில், தலைமைச் செயல் அலுவலர் (கூடுதல் பொறுப்பு) அவர்கள் 2004 முதல் 2007 வரையிலான மூன்று ஆண்டு அறிக்கைகளில் ஒவ்வொரு ஆண்டும் இடைப்பட்ட காலத்திலே அதிக மானியங்கள் துறைக்கு அளிக்கப்பட்ட காரணத்தாலும், 341 நிறுவனங்களை நேரில் சென்று பார்த்துவிட்டு அதனடிப்படையில் அறிக்கை தயார் செய்த காரணத்திலும் காலதாமதம் ஏற்பட்டது என குழுவின் முன் தெரிவித்தார்.

(6)–ன் தொடர்ச்சி

ஒவ்வொரு ஆண்டிலும் ஏற்பட்ட காலதாமதம் இந்த மூன்று வருடங்களிலும் தொடர்ந்துள்ளது. இந்த ஆண்டு முதல் அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் காலதாமதம் ஏற்படுவதைக் கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக் கொண்டு வருகிறோம். 2007–2008–ஆம் ஆண்டை பொறுத்தவரையில், உரிய காலத்திலேயே அறிக்கைகளைச் சமர்பிக்க தகுந்த ஏற்பாடுகளை செய்து வருகிறோம் என்று தலைமைச் செயல் அலுவலர் தெரிவித்தார்

மேலும், 2003–2004 மற்றும் 2004–2005–ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகள் உரிய படிவத்தில் தான் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. குழுவின் அறிவுரைக்கேற்ப, இனிவருங்காலங்களில் உரிய படிவத்தில் அறிக்கைகளை பூர்த்தி செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குழு முன் தெரிவித்தார்.

குழுவின் கருத்துரை

(7)

இனிவருங்காலங்களில் ஆண்டறிக்கைகளை அளிப்பதில் காலதாமதம் ஏற்படும் பட்சத்தில் அதற்கான காரணங்களை உரிய படிவத்தில் அமைச்சரின் ஒப்புதல் பெற்று சமர்ப்பிக்க வேண்டுமென்று குழு வலியுறுத்தியது. 2004–2005 மற்றும் 2005–2006–ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத்தொழில் வாரியம் மற்றும் 2006–2007–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் ஆண்டறிக்கைகள் பேரவை முன்வைத்ததற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கு துறையளித்த விளக்கத்தை ஏற்றுக்கொள்ளலாம் என குழு முடிவு செய்தது.

கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம்	2005–2006	31.03.2007	28.01.2008	9 மாதங்கள் 27 நாட்கள்

துறையின் பதில்
(6)

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் அரசு இணைச் செயலாளர் அறிக்கையைப் பேரவைக்கு 9 மாதங்கள் 27 நாட்கள் காலதாமதமாக அளித்ததற்கு முதற்கண் எனது வருத்தத்தையும், மன்னிப்பையும் கோருகின்றேன். ஏனென்றால், இந்த நிகழ்வு எங்களுடைய கடமையிலிருந்து நாங்கள் தவறியதால் ஏற்பட்டது என்பதற்காக நாங்கள் மன்னிப்பு கோருகிறோம்.

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர், 2005–2006–ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை இந்த வருடம் தான் காலதாமதம் ஏற்பட்டது. 2006–2007–க்கான அறிக்கை மே மாதம் அனுப்பியுள்ளோம். அமைச்சர் அளவில் சுற்றாணையில் உத்தரவு பெற்றுள்ளோம். காலதாமதம் ஏற்பட்டதற்கான விளக்கத்தையும் சமர்ப்பித்திருக்கிறோம். தவிர்க்க முடியாத ஒரு சில காரணங்களினால், இந்த ஒரு வருடம் மட்டும் தான் இவ்வாறு காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்று குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

குழுவின் கருத்துரை
(7)

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 2005–2006 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை காலதாமதம் ஏற்பட்டுள்ள நிலை குறித்து குழு இனிவருங்காலங்களில், இதுபோன்ற காலதாமதங்கள் ஏற்படாமல் குறித்த காலத்தில் ஆண்டறிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமென்றும், அப்படி காலதாமதம் ஏற்படும்நேர்வில் துறையின் அமைச்சருடைய ஒப்புதலைப் பெற்று சமர்ப்பிக்கவேண்டும் என்றும் குழு வலியுறுத்தியது.

மேலும், இவ்வறிக்கைக்கான காலதாமதத்திற்கு துறையளித்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளலாம் என குழு முடிவு செய்தது.

இணைப்பு–2

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

24.7.2008	சென்னை
18.8.2008, 19.8.2008, 20.8.2008	கன்னியாகுமரி திருநெல்வெலி (குற்றாலம்)

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS